Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 13 | 28-11-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -284

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247

## தேசியத் தலைவர் பிரபாகரன் சனாதிபதி சந்திரிகாவிற்கு அறிவுறுத்து

# பொறுமைக்கும், எதிர்பார்ப்பிற்கும் எல்லையுண்டு;

# பேச்சுவார்த்தைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்!

## கோரிக்கைகள் நிராகரிக்கப்படின் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை

**"பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையிற் சிறிலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் காலந்தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து காலத்தை இழுத்தடித்து எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை".**

இவ்வாறு தனது நேற்றைய மாவீரர் தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில், எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம் எனவும் தெரிவித்தார்.

(தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின உரை முழுமையாக 6ஆம், 7ஆம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ளது.)

## கடற்கரும்புலி அணியினர் மல்லாவியில் அஞ்சலி!

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டம் மல்லாவியில் கடற் கரும்புலி வீரர்களைக் கொண்ட அணியினர் கரும்புலிகள் நினைவாலயத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 10.30மணிக்கு கடற் புலிகளின் கரும்புலி அணியினரும், கடற் புலிகள் அணியினரும் மல்லாவி அனிஞ் சியங்குளம் அ.த.க.பாடசாலையில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் அணியாக நகர்ந்து கரும்புலிகள் நினைவாலயத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.



## பொதுஇடங்களிலும்,வீடுகளிலும் மக்கள் சுடரேற்றி அஞ்சலி!

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழா தாயகப் பிரதேசம் எங்கும் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரர் துயிலும் இல்லங்களில் பிரதான நிகழ்வுகள் நடைபெற வீதிகள், பொது இடங்கள், போராளிகளிகளின் பாசறைகள், விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்கள், பாடசாலைகள், இல்லங்கள், அரச, அரசார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

அனைத்து மாவட்டங்களின் பிரதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவர் பிரதான ஈகச்சுடரேற்ற மாவீரர்களுக்கு தாயகம் எங்கும் அஞ்சலி

### துயிலுமில்லங்கள் அனைத்திலும் பிரதான சுடரை தளபதிகள்ஏற்றினர்

தமிழீழ விடுதலைக்காக தம்மை ஆகுதியாக்கி வீரச்சாவடைந்த மாவீரர் அனைவரையும் ஒன்றுசேர துதிக்கும் புனித நாளான நேற்று தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பிரதான ஈகச்சுடரை ஏற்றி வணக்கம் செலுத்தினார்.

தேசியத்தலைவரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர்நாள் உரை நிறைவடைந்ததைத் தொடர்ந்து 06.05 மணிக்கு தாயகம் எங்கும் மணி ஒலி எழுப்பப்பட்டது. 06.06 மணிக்கு மாவீரர்களை ஒன்று சேர மக்கள் அனைவரும் போற்றும் அகவணக்கம் நடை பெற்றது.

06.07 மணிக்கு பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் தளபதிகள், போராளிகள் சூழ்ந்து நிற்க தேசியத் தலைவர் பிரதான ஈகச்சுரேற்றி வணக்கம் செலுத்தினார்.

சமவேளையில் தாயகத்தின் அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் பிரதான ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்களின் கல்லறைகள் முன்பாக பெற்றோர், உரித்துடையோர் சுடர்களை ஏற்றினர்.

இதேவேளை தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அமைந்துள்ள மாவீரர் மண்டபங்களிலும், மக்களின் வீடுகளிலும் ஈகச்சுடர் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இது .தமிழீழம் எங்கும் மாவீரர்களின் நினைவில் ஒன்று கலந்திருந்தது.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் கட்டளைத்தளபதி கேணல் தீபன், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தில் கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல். மங்களேஸ் ஆகியோர் பிரதான சுடர்களை ஏற்றி வைத்தனர்.

இதேவேளை கிளிநொச்சி கோவிந்தன் .கடைச் சந்தியில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி நினைவு மண்டபத்தில் சாள்ஸ் அன்ரனியின்சிறப்பு படையணி சிறப்புத் தளபதி லெப்.கேணல்.நகுலன் சுடரேற்றினார்.

**மட்டு-அம்பாறையில்...**

மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவடி முன்மாரிக் கோட்ட துணைத்தளபதி யோகராஜ்,அம்பாறை உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனன்(12ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### அறிவித்தல்

மூத்த,முதன்மையான மாவீரர் களது கலர் படங்கள் விற்பனைக் குண்டு ஒருதொகுதி 30/= சகல அறிவமுதிலும் பெற்றுக்கொள்ள லாம். (5304)

### வீடு வாடகைக்கு

ஏ-9 வீதி பரந்தன் சேவாலங்கா அலுவலகத்திற்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: செ.சிவகுருநாதன், கண்டிவீதி, பரந்தன். (5314)


# காவல்துறை நடுவப் பணியகத்தில் சிறப்புடன் நடந்த மாவீரர்நாள்நிகழ்வு!

கிளிநொச்சியில்-அமைந்துள்ள காவல்துறை நடுவப் பணியகத்தில் மாவீரர் இறுதிநாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன. நடுவப் பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை ஆளணிப்பிரிவு பொறுப்பாளர் த.கலையரசன் அவர்கள் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை காவல்துறையைச் சேர்ந்த தலைமைக் காவலர் க.ஜெயமதி அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை காவல்துறையைச் சேர்ந்த கண்காணிப்பாளரும் பிரதம பரிசோதகருமான திரு.சி.குணரட்னம் அவர்கள் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம், அகவணக்கம், உறுதி உரை என்பன இடம்பெற்றன.

இந் நிகழ்வின்போது காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், பிரதம பரிசோதகர்கள், பரிசோதகர்கள், உப பரிசோதகர்கள், பணிமனைப் பொறுப்பாளார்கள், காவல்துறை உறுப்பினர்கள், போராளிகள் கலந்து சிறப்பித்தனர்.

# திருமலையில் கைக்குண்டு வீச்சில் இரா.சம்பந்தனின் மகன் படுகாயம்!

## - உதவியாளரும் காயமடைந்தார்

(திருமலை)

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் புதல்வர் செந்தூரன் மற்றும் அவரது உதவியாளர் முருகேசு கோபாலன் ஆகியோர் மீது நேற்று மாலை கைக்குண்டு வீசப்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து இருவரும் பலத்த காயத்திற்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் திருகோணமலை அலஸ்தோட்டப் பகுதியிலிருந்து நகரிலுள்ள தங்களது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோது இக்கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் கொழும்பு பிரதம வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் இம்மாதம் 18ஆம் திகதி முன்வைக்கப்பட்ட முதலாவது வரவு செலவுத் திட்டம் 34 மேலதிக வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனடிப படையில் வரவு,செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 126 வாக்குகளும், எதிராக 92 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜாதிக ஹெல உறுமய மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர். இதேவேளை இதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர்.

# "விடுதலைப்புலிகள்" ஏடு இன்று வெளியாகிறது!

தமிழீழத் தேசியத் தலைவரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர்நாள் உரையைத் தாங்கிய விடுதலைப்புலிகளின் கார்த்திகை மாதத்திற்கான அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப்புலிகள் ஏடு" இன்று வெளிவருகின்றது.

க.வே.பாலகுமாரனின் இமாலயவியப்பு, எல்லாளனின் சந்திரிகாவுடன் சமாதானம்...,பிரபுத்திரனின் சவால்களுக்கு சக்திமிக்க ஆளுமை..., கலாநிதி க.சோமஸ்கந்தனின் மாவீரர்நாள் போஸ்ரர்களும், பிறவெளியீடுகளும்..., அ.பார்த்தீபனின் ஒரு சுமைதாங்கியின் வாழ்வு, வியாசரின் உலைக்களம் மற்றும் பல அம்சங்களைத் தாங்கி இவ் ஏடு இன்று வெளி வருகின்றது.

# வவு.வில் மேலும் இரண்டு காவலரண்கள் மீது தாக்குதல்!

(வவுனியா)

வவுனியாவில் முறுகல் நிலை தணிந்துள்ள போதும் பொலிசாரின் மேலும் இரண்டு காவலரண்கள் தாக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு வவுனியா வேப்பங்குளம், நெளுக்குளம், பகுதியில் பொலிசாரின் இரண்டு காவலரண்கள் தாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே நெளுக்குளம் வேப்பங்குளம் போன்ற பிரதேசத்தில் நான்கு காவலரண்கள் தாக்கப்பட்டும் தீயிடப்பட்டும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)


# சாவு அறிவித்தல்

## திரு காசித்தம்பி கந்தசாமி (ஓய்வு பெற்ற மலேரியா தடை வெளிக்கள உத்தியோகத்தர்)

சிவன் கோயில் வீதி மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.117/13 குட்செட் வீதி வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.காசித்தம்பி கந்தசாமி 26.11.2004 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான காசித்தம்பி சேதுப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், டிக்கோயா நாகலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம் சென்ற திருமதி. சிவஞானத்தின் அன்புக் கணவரும், பிரபாலின் (ஆசிரியை வவுனியா ம.ம.வி), சுபாஸ்கரன்(பிரான்ஸ்), சுரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ்கரன் (ஆசிரியர் வவுனியா ஒலுமடு அ.த.க.பாடசாலை நெடுங்கேணி), சுபாஜினி (ஆசிரியை வவுனியா றம்பைக்குளம் மகளிர் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வரதராஜன் (மட்டுவில் தெற்கு சாவகச்சேரி), லதா(பிரான்ஸ்), திலகா (நோர்வே), வசந்தகுமார்(தபாலகம் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமையாள் (வவு.றம்பைக்குளம் மகளிர் ம.வி), கௌதமன், கௌசல்யா(பிரான்ஸ்), கௌசிகா, காவியா (நோர்வே), சுபாஸ்கன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.11.2004 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக தோணிக்கல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்
கந்தசாமி சுதேஸ்கரன்
(கண்ணன் - மகன்)

(சி-10830)

# சாவு அறிவித்தல்



## திருமதி. அமிர்தநாயகி இராசநாயகம்

யாழ்ப்பாணம் ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், இல: 249 ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. அமிர்தநாயகி இராசநாயகம் அவர்கள் 26.11.2004 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் பொன்னையா இராசநாயகத்தின் அன்பு மனைவியும், பெல்சியன் (லண்டன்), சர்மிளா (கனடா), நிர்மலா, மஞ்சுளா, பிரேமிளா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயகுமார் சிவகுமார், சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஸ்கந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள்.

இல: 249,
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(5317)

# தொழிற் பயிற்சிநெறி-விண்ணப்பங்கோரல்

யு.என்.எச்.சி.ஆர் (UNHCH) நிறுவனத்தின் நிதியுதவியுடன் மற்றும் யப்பானிய அரசாங்கம் வழங்கும் நிதியுதவியுடன் உலக உணவுத்திட்டம் வழங்கும் உணவுப்பொருட்களின் உதவியுடனும் யப்பானிய உறவுப்பால நிறுவனமும் (BAJ) கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் (REERDO) இணைந்து 155 ஆம் மைல்கல் ஏ-9 வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள நிறுவனத்தின் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்:-**

1) உழவு இயந்திரத்திருத்தம் (இருபாலாரும்)
2) தையல் (பெண்கள்)

**பயிற்சி நெறிக்கான காலம் : 06 மாதங்கள்**

**தகைமைகள் :-**

- 17-29 வயதிற்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
- ஆண்டு 10 வரை கல்விகற்றவராயிருத்தல் வேண்டும்.
- நலிவுற்ற குடும்ப அங்கத்தவராயிருத்தல் வேண்டும்.

**பயிற்சியின் அனுகூலங்கள்:-**

- தொழில்சார் பயிற்சிச்சான்றிதழ்
- சுயதொழில் முயற்சிக்கான தகுதி

**ஊக்குவிப்பு**

பயிற்சிக்காலத்தில் உலக உணவுத்திட்டத்தின் மூலம் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:-** 15-12-2004

**குறிப்பு:-** பயிற்சிக்கான விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத்தயாரிக்கப்பட்டு சுயவிபரங்கள் சரிவர நிரப்பப்பட்டு தபாலிலோ அல்லது நேரிலோ கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

தொழிற்பயிற்சி நிலையம்,
155 மைல்கல் ஏ-9 வீதி,
தொண்டமான்நகர்,
கிளிநொச்சி.

(சி.10641)

பணிப்பாளர்

## சீனாவில் பள்ளிக்கூடத்தில் 8 மாணவர்கள் குத்திக்கொலை வாலிபர் வெறிச்செயல்

(ஷாங்காய்)

சீனாவில் பள்ளிக்கூடவிடுதி ஒன்றில் தூங்கிக் கொண்டிருந்த மாணவர்கள் 8பேரை வாலிபர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார்.

சீனாவின் மையப்பகுதியான ஹெனான் பிராந்தியத்தில் ருழோவ் நகரில் உயர் நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அருகிலுள்ள விடுதியில் தங்கியிருந்தனர். நேற்று இரவு மர்மநபர் ஒருவர் விடுதிக்குள் திடீரெனப் புகுந்து அங்கு தூங்கிக்கொண்டிருந்த மாணவர்களைக் கத்தியால் சரமாரியாகக் குத்தினார். இதனால் மாணவர்கள் அலறியடித்து ஓடினர். கத்திக்குத்தில் காயமடைந்த 08 மாணவர்கள் உயிரிழந்தனர். மற்றும் 4பேர் காயமடைந்தனர்.

கத்தியால் குத்திய மர்ம வாலிபர் அங்கிருந்து தப்பியோடி தலைமறைவாகிவிட்டார். இந்தச் சம்பவம் குறித்துப் பொலிசார் வழக்குப் பதிந்து குற்றவாளியைத் தேடி வருகின்றனர்.



கடற்கரைகளில் தாக்குதல் நடத்தும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் கடற்படை வீரர்கள் கடற்கலத்தில் இருந்து இறங்குகின்றனர்.

## ஆப்கானில் கடத்தப்பட்ட ஐ.நா. ஊழியர் மூவரும் நேற்றுமுன்தினம் விடுதலை

ஆப்கானிஸ்தானில் கடத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று ஐ.நா. பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இது பற்றி ஆப்கான் பொலிஸ் நிருபர்களிடம் கூறியதாவது கடந்த நான்கு வாரங்களுக்கு முன்பு ஐ.நா. சபையில் பணியாற்றிய கைதிகள் மூன்றுபேரை ஆப்கான் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். சிறையிலுள்ள தங்கள் கைதிகள் மூன்றுபேரை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் நான்கு வாரங்களாக அவர்களை சிறைபிடித்திருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் அந்த மூன்று கைதிகளும் திடீரென விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடுதலைக்காக தீவிரவாதிகள் விடுவிக்கப்படவில்லை. தீவிரவாதிகளுக்கு பணமும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கோரிக்கையும் ஏற்கப்படவில்லை.வடக்கு அயர்லாந்தைச் சேர்ந்த அனெட்டா பிளானிகன், பிலிப்பைன் தூதர் ஏஞ்சரிட்டோ நாயன், கொசாவா நாட்டைச் சேர்ந்த ஸ்குப்பே ஹெபிபி ஆகிய மூன்று பேர் விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

# இந்தோனேசியாவில் பூகம்பம்

# 17பேர் பலி; 300 வீடுகள் தரைமட்டம்

(யகார்த்தா)

**இந்தோனேசியாவில் ஏற்பட்ட பூகம்பத்தால் 17 பேர் பலியானார்கள். 130 பேர் காயமடைந்தனர்.மேலும் 300 வீடுகள் மண்ணிற்குள் புதைந்து தரைமட்டமாயின.**

இந்தோனேசியாவின் கடற்கரை நகரம் நபிர் இங்கு நேற்று முன்தினம் திடீரென பூகம்பம் ஏற்பட்டது. இதனால் அங்கு உள்ள வீடுகள் அனைத்தும் அதிர்ந்தன. இதில் பல வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. இடிபாடுகளில் சிக்கிப் பலர் இறந்தனர். இறந்தவர்களில் 11 பேரின் உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இன்னமும் 6பேரின் உடல்கள் மீட்கப்படவில்லை. அவர்களின் உடலைத் தோண்டும் பணியும் நடந்து வருகின்றது. இந்த பூகம்பத்தால் 130 பேர் காயமடைந்தனர். அவர்களில் 30 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. பூகம்பத்தால் 300 வீடுகள் மண்ணிற்குள் புதைந்து தரை மட்டமாயின. தற்போது நபிர் நகரில் முழுவதுமாக பவர் சப்ளை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நகரம் இருளில் மூழ்கியுள்ளது. தொடர்ந்தும் பூகம்ப அதிர்வுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் தெருக்களிலேயே முகாமிட்டுள்ளனர். காயமடைந்த மக்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களு[illegible] மருந்துப்பொருட்கள், உ[illegible]வுப் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். பூகம்பத்தால் விமானத்தள ஓடுபாதை சேதமடைந்துள்ளதால் மற்ற நகரங்களிலிருந்து மருந்துப் பொருட்கள் கொண்டு வரமுடியவில்லை.

பூகம்பம் காலை 9.25 மணியளவில் நடந்தது. பூகம்பம் ரிக்டர் ஸ்கேல் அளவில் 6.4 என பதிவாகி யிருந்தது. பூகம்பத்தால் 150 கட்டடங்கள் இடிந்ததாகவும், 178 கட்டடங்கள் தீப் பிடித்து எரிந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த பெப்ரவரி மாதம் இந்தோனேசியாவின் ஜெயபுராசின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 37 பேர் பலியானதும், 600 பேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவில் 9ஆவது மாதத்தில் நடந்த இரண்டாவது பூகம்பமாகும் இது. இந்தோனேசியாவில் அதிகளவில் தீவுகள் இருப்பதால் இது போன்ற பூகம்பங்கள் அடிக்கடி நடப்பதாகக் கூறப்படுகின்றது.

## ஐ.நா.ஊழியர் கடத்தல் சம்பவத்தை ஏற்குமாறு பிரிட்டிஷ் விடுதி ஊழியர்கள் மீது ஆப்கான் அழுத்தம்

(லண்டன்)

ஆப்கானில் மூன்று ஐ.நா.பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தமக்கும் தொடர்பிருப்பதாக ஒப்புக்கொள்ளுமாறு ஆப்கானிஸ்தானிய அதிகாரிகள் வற்புறுத்துவதாக பிரிட்டிஷ் விடுதி உரிமையாளரும் புகைப்படவியலாளரும் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் உள்துறையமைச்சில் இடம்பெற்ற விசாரணையின்போது இவர்கள் கோரியதாகத் தெரிவித்துள்ள பீற்றர் ஜுவனல் கொசோவோ வணிகரிடமிருந்து முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு செய்தி ஒன்றை எடுத்துச் சென்றதாகவும், செய்தியின் பிணைப்பணம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி ஐ.நா. பணியாளர்களை முஸ்லிம் தீவிரவாதிகளே கடத்திச் சென்று மறைத்து வைத்திருக்கின்றனர். எனினும், பிணைப்பணம் செலுத்தப்பட்டது பற்றி தனக்குத் தெரியாது என ஜுனவல் தெரிவித்துள்ளார்.

மேற்படி பணியாளர்கள் ஆப்கான் சனாதிபதித் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை கடந்த ஒக்ரோபர் 28ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டனர்.

எனினும், காபூலில் உணவு விடுதி ஒன்றை வைத்திருக்கும் ஜுனவல் கடந்த வியாழன் உள்துறை அமைச்சுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

எனினும், அவர் தாக்கப்படவோ, கைது செய்யப்படவோ இல்லை. ஆனால், சிலர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தன்னையும் சம்பந்தப்படுத்த முயன்றதாகவும், அதற்காக கையெழுத்தைப்பெற முயன்றதாகவும் தெரிவித்துள்ளார்.



# விளையாட்டு

யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்கள்

## தமிழீழ தேசியத் தலைவருக்கு நினைவுக்கேடயம்

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களினால் தமிழ் தேசியத் தலைவரின் 50ஆவது அகவை நிறைவையொட்டி நினைவுக் கேடயம் தலைவர் பிறந்த இடமான வல்வெட்டித்துறையில் வைத்து வழங்கப்பட்டது.


நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு லெப்ரினனன்ட் கேணல் தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் இருந்து வீதி ஓட்டம் மூலம் இவ் நினைவுப் பரிசு எடுத்துச் செல்லப்பட்டது.

தியாகி திலீபன் நினைவுத் தூபியில் பொதுச் சுடரினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன், யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் புண்ணியசீலன், யாழ். உதைப் பந்தாட்ட லீக் தலைவர் சீரணி பேட் அன்ரனிப் பிள்ளை, யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் இராசலிங்கம் யாழ்மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த கனகலிங்கம் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுக் கேடயம் தாங்கிய வீதி ஓட்டப்போட்டியை யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன் ஆரம்பித்து வைத்தார். (41)

## அடிலெஸ்ட் டெஸ்ட் போட்டி

# அவுஸ்திரேலியா அபாரப் பந்து வீச்சு நியூசிலாந்து அணி தடுமாற்றம்





அவுஸ்திரேலிய- நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் அடிலெஸ்டில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று நியூசிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்சில் 2 விக்கெட்டை இழந்து 50ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்சிற்காக 8 விக்கெட்டை இழந்து 575 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யஸ்ரின் லாங்கர் 215 ஓட்டங்களையும், லீமன் 81 ஓட்டங்களையும் ஹெய்டன் 70 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் வோர்ன் 50,53 ஓட்டங்களை முறையே பெற்றனர்.

பந்து வீச்சில் விக்டோரி 5 விக்கெட்டுக்களையும், வைஸ்மன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடும் நியூசிலாந்து இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பிளெமிங் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும், வைஸ்மன் 4 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.கிளெஸ்பி, காஸ்ப ரோவிச் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



## மீண்டும் கிரிக்கெட் அரங்கில் முரளிதரன்



உபாதைக்கு உள்ளான இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பூரண சுகமடைந்து விட்டதாகவும் அவர் போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என அவரது வைத்தியர் அறிவித்துள்ளார்

தோள்பட்டை உபாதை காரணமாக கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி முதல் போட்டிகள் எதிலும் கலந்து கொள்ளாத முரளிதரன் அவுஸ்திரேலியா சென்று சிகிச்சை பெற்றார்.

இந்த நிலையில் கடந்த வாரம் அவுஸ்திரேலியா சென்ற முரளிதரன் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதன்போது அவர் பூரண குணமடைந்து விட்டதாகவும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம் எனவும் அவரது வைத்தியர் அறிவித்துள்ளார்.

## பெடரேஷன் கோப்பை டென்னிஸ்போட்டி ஷரபோவா பங்கேற்றால் வெளியேறுவேன்

- மிஸ்கினா

ரஷ்யாவைச்சேர்ந்த மரிய ஷரபோவாவும் அனஸ்டாஷியா மிஸ்கினாவும் டென்னிஸ் உலகில் முன்னணி வீராங்கனைகளாக வலம் வருவது அறிந்ததே.

ஆனால் இருவரும் நாட்டுக்காக ∴பெடரேஷன கோப்பை போட்டியில் விளையாடுவதில் பிரச்சினை எழுந்துள்ளது. "அடுத்து ஆண்டு நடைபெறவுள்ள ∴பெடரேஷன் கோப்பை போட்டிக்கான குழுவில் ஷரபோவா இடம்பெற்றால் நான் குழுவிலிருந்து வெளியேற நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் மிஸ்கினா. இவர் பிரெஞ்ச் ஓபன் சம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷரபோவாவின் தந்தை யூரியின் நடத்தை முற்றிலும் தவறானது. ஆணவம் பிடித்தவர். அவரைப் போன்றவர்கள் மத்தியில் விளையாட நான் விரும்பவில்லை என மிஸ்கினா தெரிவித்துள்ளார்.

அவரது தந்தையும், பயிற்சியாளருமான, யூரியுடன் ஏற்பட்ட விவகாரம் (தெளிவுபடுத்தப்படவில்லை) காரணமாகவே மிஸ்கினா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஆதலால் ஷரபோவாவுடன் பிரச்சினை இல்லை என்பது தெரியவருகிறது.

# சிறிலங்காப் படையினர் மிலேச்சத்தனமாக வைத்தியசாலையில் புகுந்தும் தாக்கலாம்!

## படையினரின் தாக்குதலில் பாதிப்புற்றோர் கிளி.வைத்தியசாலைக்கு மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

**"சிறிலங்கா இராணுவத்தினராலும் பொலிசாரினாலும் வைத்தியசாலையில் வைத்து மீண்டும் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதலுக்கு உட்படுத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வந்து சிகிச்சை மேற்கொண்டு வருகின்றோம்"**

இவ்வாறு கடந்த 25ஆம் திகதியன்று மன்னாரில் வைத்து தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றுவதற்கு தடை விதித்த இராணுவத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் மீது இராணுவத்தினரும் பொலிசாரும் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் காயமடைந்து தற்போது கிளிமாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்டு வரும் நான்கு பேர் தெரிவித்தனர்.


பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர்


கண்காணிப்புக்குழு பார்வை

மன்னாரைச் சேர்ந்த தோமஸ் குரூஸ் (வயது 54) என்பவர் மன்னாரில் நடைபெற்ற சம்பவம் குறித்து எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவிக்கையில்,

சம்பவ தினம் மாவீரர் தினநிகழ்வில் ஈடுபட்டிருந்தோம் எமக்கு அருகாமையில் வன்னிமாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், தாழ்வுப்பாடு பங்குத்தந்தை ஆகியோர் நின்றிருந்தனர் அவ்விடத்திற்கு பகல் 11.00 மணியளவில் திடீரென பெருமளவில் வந்த இராணுவத்தினரும் பொலிசாரும் அங்கு நின்ற அனைவரையும் துவக்குப் பிடியினாலும் பைப் குழாய், மற்றும் கட்டை என்பவற்றினாலும் தாக்கினார்கள் இதன் போது பாராளுமன்ற உறுப்பினரும் பங்குத்தந்தை உட்பட அனைவரும் தாக்குதல்களுக்கு உள்ளானோம் மிகமோசமாக தாக்குதலுக்குள்ளான எங்களை மக்கள் மன்னார் வைத்தியசாலையில் அனுமதித்தனர். எங்களை வைத்தியசாலையில் அனுமதித்த சில மணித்தியால யங்களில் வைத்தியசாலை வளாகத்தினை சூழ பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன் காரணமாக மீண்டும் நாங்கள் தாக்குதலுக்குள்ளாகலாம் என்ற அச்சத்தினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது என்னுடன் மேலும் சம்பவத்தில் காயமடைந்த மூவரும் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றார்.

மேற்படி காயமடைந்தவர்களை கிளி.மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் கண்காணிப்புக்குழு பிரதிநிதி பார்வையிட்டு சம்பவ நிலைமைகளைக் கேட்டறிந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ.சு)

## குழியில் வீழ்ந்து சிறுவன் பலி!

பேராறு வசந்தபுரம் கிராமத்தில் கடந்த செவ்வாய் மாலை 3.00 மணியளவில் புதிதாக வெட்டப்பட்ட மணல் குழியொன்றில் தவறி வீழ்ந்து 5 வயதுச் சிறுவன் பலியாகியுள்ளார். இச்சம்பவத்தில் கிருஸ்னானந்தன் என்பவரே தவறி வீழ்ந்து பலியானவர் ஆவார். (08)

## பிரதேச சபை உப அலுவலகம் மருதங்கேணியில் திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கடந்த வியாழனன்று காலை 10.00 மணியளவில் பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி இராமநாதன் ஏற்றி வைத்தார் அதனை அடுத்து தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் இல்லப் பொறுப் பாளர் புவனச்சந்திரன் ஏற்றிவைத்தார்.

பருத்தித்துறை பிரதேசசபையினர் உப அலுவலக பெயர்ப் பலகையினை மருதங்கேணி உதவி அரச அதிபர் ரி-ஜெயசீலன் திரை நீக்கம் செய்து வைத்தார். அலுவலகத்தினை யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா திறந்து வைத்தார். நிகழ்வின் உரையினை யாழ். மாவட்ட உதவிஆணையாளர் இராசையா, மருதங்கேணி ப.நோ.கூ. சங்கத் தலைவர் தியாகராசா சாவ கச்சேரி பிரதேசசபை செயலாளர் பாலச்சந்திரன் ஆகியோர் நிகழத்தினர். இந்நிகழ்வுக்கு கடற்புலிகளின் மகளிர் தளபதி மதிவதனியும் வருகை தந்திருந்தார். நன்றியுரையினை பருத்தித்துறை பிரதேசசபை உபபணிமனைப் பொறுப்பதிகாரி பொ.தங்கராசா நிகழ்த்தினார். (11)

## மழையின் பின் ஏற்பட்ட காய்ச்சலால் பலர் பாதிப்பு!

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் கல்விளான் கிராமத்தில் மழையினால் ஒருவகைக் காய்ச்சல் பரவ ஆரம்பித்துள்ளது. பலர் காய்ச்சலால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கிராமத்தில் மழை காரணமாக சில இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளமையினால் நீர் தேங்கிய பாதைகளினாலும் மக்கள் பயணிக்கின்றனர். நீர் தேங்கிய கிடங்குகளில் நுளம்புப் பெருக் கமும் ஏற்பட்டு வருகின்றன.

கிராமத்தில் 130 குடும்பங்கள் வாழ்ந்தபோதும் 50 பேருக்கு மேற்பட்டவர்கள் இக் காய்ச்சல் நோயினால் அவதிப்படுகின்றனர். அண்மையில் உள்ள துணுக்காய், மல்லாவி மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றும் வருகின்றனர். (24)

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக மழை வெள்ளம் கிணறுகளில் உட்புகுந்துள்ளதன் காரணமாக குடிநீர் அசுத்தமடைந்து தொற்றுநோய் ஏற்படக்கூடியநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வருமுன் காக்கும் சுகாதார நடவடிக்கையினைச் சகலரும் உடன் கடைப்பிடிக்கும் வண்ணம் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகை விடுத்துள்ளதுடன் கீழ்வரும் நடைமுறைகளைப் பின்பற்றும் படியும் வேண்டியுள்ளார்.

1.கிணறுகளில் வெள்ளம் புகுந்துள்ளமையால் குடிநீரைக் கொதிக்வைத்து ஆறிய பின்னரே குடிப்பதற்குப் பயன்படுத்துங்கள்.

2.மலங்கழிப்பதற்கு மலசல கூடத்தினையே பயன்படுத்துங்கள்.

3.உணவுகளை இலையான் புகாதவாறு மூடிவைத்து உண்பதே பாதுகாப்பாகும்.

4.தனிநபர் சுகாதாரத்தைப் பேணு வதுடன் சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாகப பேணுங்கள் (ஸோ)

## பொச்சுமட்டை ஊறவிட்ட கிடங்கினுள் வயோதிபர் வீழ்ந்து பரிதாப மரணம்

(ஒட்டுசுட்டான்)

பொச்சு மட்டை ஊறவிட்ட கிடங்கினுள் தவறுதலாக வீழ்ந்ததில் வயோதிபர் சாவடைந்துள்ளார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது ; கடந்த செவ்வாயன்று பேராறு பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற நபர் பேராற்றுப் பண்ணையிலுள்ள தும்புத் தொழிற்சாலை வளாகத்தில் பொச்சு மட்டைகள் ஊறவிட்ட கிடங்கினுள் தவறுதலாக விழுந்து சாவடைந்துள்ளார்.

2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெரியதம்பி பரமானந்தம் (வயது-65) என்பவரே இவ்வாறு மரணமானார் (05)

## வீடு உடைத்து திருடிய நபர் பொருட்களுடன் கைது

(மல்லாவி)

மல்லாவி நகர்ப் பகுதியில் எம்எஸ்.எப். வீதியில் கடந்த 13 ஆம் திகதி இரவு நேரம் வீடு உடைத்துத் திருடிய சந்தேக நபர் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.மேற்படி மல்லாவி எம்.எஸ்.எவ் வீதியில் வசிக்கும் பா. ராசாத்தி என்பவரின் வீட்டில் யாருமற்ற நேரத்தில் வீடு உடைக்கப்பட்டு புடவைகள் , பொருட்கள் என்பன திருடப்பட்டன. இதன் போது சந்தேக நபரின் வீட்டில் பொருட்கள் புதைக்கப்பட்ட தகவலை அறிந்த துணுக்காய் காவல் துறையினர் சந்தேக நபரின் வீட்டை முற்றுகையிட்ட போது திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு சந்தேக நபரையும் கைது செய்து மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (24)

## பேருந்துச் சேவை வேண்டும்

(மல்லாவி)

முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒட்டங்குளம் பொன்னகர் கிராமத்திற்கான பேருந்து சேவை இன்றி மக்கள் அவதிப்படுகின்றனர்.

மேற்படி கிராமத்தில் 300இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயத் தொழிலை நம்பி தங்களின் ஜீவனோபாய வாழ்வைச் செய்து வரும் மக்கள் தங்களின் விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும் மல்லாவி நகர்ப் பகுதிக்கு 8கிலோ மீற்றர் தூரத்திற்கு நடந்து வந்தே தங்களின் பொருட்களை விற்று வருகின்றனர். இதனால் பூவரசங்குளம் பொன்னகர் கொம்பறுத்தகுளம் பகுதி மக்கள், நோயாளர்கள், பாடசாலை மாணவர்கள் பலரும் பிரயாணங்களை மேற்கொள்ளப் பேருந்துசேவை இன்றி இருந்து வருகின்றனர். இக் கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகள் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (24)

## ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையம் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கமநல சேவை நிலையம் நிகொட்திட்டநிதியுதவியுடன் மீள அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை 11மணியளவில் முல்லை மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் வைதேகியின் சகோதரி தேவகுலரூபி ஏற்ற, தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் வலயப் பொறுப்பாளர் பாவரசி ஏற்ற கமநல சேவை மாவட்ட கொடியினை முல்லை அரச அதிபரும், கமக்கார அமைப்பு கொடியினை உதவி ஆணையாளர் தர்மலிங்கமும் ஏற்றினர்.

கட்டட பெயர்ப் பலகையினை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் திறந்துவைக்க நிலைய கட்டடத்தை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். பெரும்பாக உத்தியோகஸ்தர் அறையினை உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, வங்கிக்கிளை அறையினை புதிதாக நியமனம் பெற்ற உதவி ஆணையாளர் சிவலிங்கம் திறந்துவைக்க கமக்கார அமைப்பு மாவட்ட சம்மேளன அறையினை நிக்கொட் திட்ட பொறியியலாளர் நிரஞ்சன் திறந்து வைத்தார். அரச கால்நடைவைத்திய நிலையத்தை கால் நடைவைத்தியர் சு.கஜரஞ்சன் திறந்து வைத்தார். விவசாய போதனாசிரியர் அறையினை விவசாய திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் கோகுலதாசன திறந்துவைத்தார். கருத்துரைகளை கலந்து கொண்ட முக்கிய பிரதிநிதிகள் வழங்கினர். இதில் விவசாயிகள், கமக்கார அமைப்பு உறுப்பினர்கள் த.பொ.மே.நிறுவன இணைப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். மேற்படி கமநலசேவை நிலையம் 1991 ஆம் ஆண்டு சிறிலங்கா விமானக்குண்டு வீச்சு மூலம் தரைமட்டமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05,20,08)



### குளங்கள் பாதிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள குளங்கள், அனைத்தும் நிரம்பியுள்ள அதேவேளை முத்துஐயன் கட்டுகுளம் இரண்டு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டிருந்தன. இதேவேளை ஒட்டுசுட்டான் புளியங்குளம், காக்கைப் பனிக்கன்குளம் நீர் பாய்வதனால் உடைப்புக்கள் ஏதும் ஏற்படலாமென அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். காக்கை பனிக்கன்குளம் வீதி வெள்ள நீரினால் அரித்து குன்றும் குழியுமாக உள்ளதோடு நீர் போக்கி ஒன்றும் உடைந்துள்ளதால் மக்கள் போக்கு வரத்திற்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. (05)

# துயிலுமில்லங்களில் சுடரேற்றல்!



முல்லைக் கடலில் கேணல் சூசை


விசுவமடுவில் கேணல் ரமேஸ்


மட்டு. தரவையில்...


அம்பாறையில் தளபதி ஜனார்த்தனன்



கிளிநொச்சியில் கேணல் தீபன்


கொடிகாமத்தில் கி. பாப்பா


முள்ளியவளையில் பா. நடேசன்


வவுனியா ஈச்சங்குளத்தில் தமிழினி


மட்டு. தாண்டியடியில் தளபதி ராம்



ஆலங்குளத்தில் கேணல் விதுசா


அளம்பிலில் லெப். கேணல் விடுதலை


முழங்காவிலில் லெப். கேணல் மங்களேஸ்


கோப்பாயில் சோ. தங்கன்


வேலணை - சாட்டியில் கண்ணன்


வன்னிவிளாங்குளத்தில் தளபதிகளான
சசிக்குமார், கோபால்

# இனப்பிரச்சினையின் அடிப்படைகள் தொடர்பாக

# உங்கள் கொள்கைகளைப் பகிரங்கப்படுத்துங்கள்!

## தேசியத் தலைவர் பிரபாகரன் சிறிலங்கா ஆளும்-எதிர்க்கட்சிகளிடம் வலியுறுத்து



எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக்கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத்திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

### எமது தாயக மண் இன்னமும்

### முழுமையாக விடுதலை பெறவில்லை!

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையில் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும் பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறிலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படை வலுச் சமநிலையை நிலைநாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம்மீது திருப்பினோம். எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவுபெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலைபெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும், பட்டினங்களும், அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கிறது. தேசவிடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

### சிக்கலானதொரு சூழ்நிலையை

### போராட்டம் எதிர்கொண்டு நிற்கிறது!

எனது அன்பான மக்களே,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்புநிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப்போருக்கு நாம் ஓய்வுகொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதிகாத்த இக்கால விரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந்நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்குபற்றியது. ஆறு மாதங்கள்வரை நீடித்த ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப் போயின. நெருக்கடி நிலையைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தவும் அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும் போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமாணங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் நிறுவப்பட்ட உப-குழுக்கள் செயலிழந்து செத்துப்போயின. இவை ஒருபுறமிருக்க, சிறிலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்ட வரைவை முன்வைக்குமாறு ரணில் விக்கிரமசிங்காவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். நீண்ட காலப் போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக் கொடுக்கவும் சிதைந்துபோன தமிழர் தேசத்தை மீள்நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை வலியுறுத்தினோம்.

### ரணில் அரசின் இடைக்கால நிர்வாக

### வரைபுகள் எமக்கு திருப்தி தரவில்லை

ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரணிலின் அரசு முன்வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைபுகளும் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்றதாக இத்திட்ட வரைபுகள் அமையப் பெற்றதால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், ஓர் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபை நாமாகத் தயாரித்துக்கொடுக்க முடிவெடுத்தோம். பல மட்டங்களிலே தமிழீழ மக்களின் கருத்தைப் பெற்று, வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைத் தயாரித்தோம். இத் திட்டம் புதுமையானது நடைமுறைச் சாத்தியமானது. எமது மக்களின் அவசரமான வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப் பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளைத் தாமதமின்றிச் செயற்றிறனுடன் நிறைவுசெய்ய வழிவகுக்கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமையப்பெற்றது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த துடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

### சர்வதேச நாடுகள் பல எமது

### இ.த.அ.ச. திட்டத்தை வரவேற்றன!

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தை வரவேற்கத் தவறவில்லை. நீண்ட காலத்தின் பின்பு முதற்றடவையாக விடுதலைப்புலிகள் தமது அரசியற் சிந்தனைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந் நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைபுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப்பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால், அதேசமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்ச்சித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரமெனக் கண்டித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், சனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை சனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிபீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்குள் சனாதிபதி சந்திரிகாவினாற் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

### தமிழ், சிங்கள இனங்களை

### தேர்தல் இரு தேசங்களாக்கியது!

இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்களப்பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப் பொதுத்தேர்தல் வழிவகுத்தது. இனவாதமும் மதவாதமும் பழமை வாதக் கம்யூனிசமும் ஒன்றுகலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இத் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியற் கட்சியாக வெற்றிபெற்றது. இந்த இனவாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது.

பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கிற் சிங்களப்பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதேசமயம், தமிழரின் தாயகமான வடகிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது. எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது. தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்கீகாரமும் எமது விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடுதலைப் புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இப் பொதுத் தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது. →

## பேச்சுக்களை எதிர்த்த ஜே.வி.பி. சந்திரிகா அரசை மிரட்டியது!

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசியலதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தபோதும் நாம் தொடர்ந்தும் அமைதி பேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகச் சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்திற்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படு வதைக் கடுமையாக எதிர்த்தது. மூன்றாந்தரப்பு நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாகக் கண்டித்தது. நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை முற்றுமுழுதாக நிராகரித்தது. எமது திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்கள் ஆரம்பமானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறிவிடப் போவதாகவும் மிரட்டியது. சமாதானப் பேச்சுக்கும் சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பியினரின் தீவிரவாதக் கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

சமாதான வழிமுறையைப் பேணி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒருபுறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் ஏற்படும்போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந்தொகைக் கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம் மறுபுறமும், பாதாளம் நோக்கிச் சரிந்து செல்லும் இலங்கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரிகாவின் அரசு பலமுனைகளில் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இந்த நெருக்கடிக்கு முகம்கொடுப்பதாயின் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரச கூட்டணிக்குள் நிலவும் உள்முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபாடும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம் வகிக்குங் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இருக்கவில்லை. தமிழர் விரோத இன வாதத்திலும், போர்வெறி பிடித்த இராணுவ வாதத்திலும் சிங்களப்பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித் திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிற் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்தநிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மையானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவருகிறது.

## சந்திரிகா அரசு பேச்சிற்கு நிபந்தனைகளை விதிக்கின்றன!

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால் எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணைபிரியாத அங்கமாக அமையவேண்டும் என வலியுறுத்துகிறது. நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டிநிற்க, சந்திரிகாவின் அரசு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுபற்றி பேச விரும்புகிறது.

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெறவேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்ட காலமாகத் தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இடம் பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும் அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடகிழக்கில் ஓா இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

## எமது இடைக்கால நிர்வாக கட்டமைப்பு கோரிக்கை நியாயபூர்வமானது

போர்நிறுத்தம்செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கி வருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளிற் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எனது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றிப் பேச வருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தின் அங்கமாக அமையவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் தீவிரவாத இனத்துவேசச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பியினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்கலாம். இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டவர்போன்று சர்வதேசச் சமூகத்திற்கு ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக இருக்கலாம். மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப் பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்படிப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றைமட்டும் நாம் திட்ட வட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

## ஏமாற்றப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீள நடைபோட நாம் தயாராக இல்லை!

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுவேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங் காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீளநடைபோட எமது விடுதலை இயக்கந் தயாராக இல்லை.

சிங்களப்பௌத்தப் பேரினவாதச் சக்திக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக் கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது. இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக் கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது பற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. சனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசீயம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப் படுத்துங்கள்.

## நிரந்தரத் தீர்வெனக் கூறி அரசு சமாதானத்திற்கு முட்டுக்கட்டை போடுகின்றது!

தென்னிலங்கை அரசி[illegible]லரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும் நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால் எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாதபட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப் போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத் திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. சமாதானத்தின் விரோதிகளையும், இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையுந் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடிமறைத்து, விடுதலைப்புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

## அரசியல் வெறுமைக்குள் எம்மால் சிறைப்பட்டுக் கிடக்க முடியாது!

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக் கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையிற் சிறிலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும், எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இப் புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக்கனவை, எத்தகைய இடர்கள், சாவல்களை எதிர்கொண்டபோதும் நிறைவு செய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

□□

# சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை முற்றுமுழுதாக தனியார் மயப்படுத்த முயற்சி

## -அமைச்சரவை உபகுழுவொன்றும் அமைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை 100வீத தனியார் மயமாக்குவதை ஆராயும் முகமாக சிறிலங்கா அரசாங்கம் அமைச்சரவை உபகுழு ஒன்றை நியமித்துள்ளது.

தற்சமயம் திறைசேரி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்குகளைக் கொண்டுள்ளது. மீதியை இந்தியன் எண்ணெய் நிறுவனம் கொண்டுள்ளது.

இந்த நிலையில் தம்மிடமுள்ள ஒருவீத பங்கையும் இந்தியன் எண்ணெய் நிறுவனத்திற்கு விற்பனை செய்ய அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இதேவேளை அரசாங்கத்தின் இவ்வாறான முனைப்புகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துவரும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற் சங்கம், தனியார்துறைக்கு எதிராகத் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளது.

தனியார்துறை தொடர்பான அமைச்சரவை உபகுழுவில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த், சரத் அமுனுகம, பீலிக்ஸ் பெரேரா மற்றும் கே.டி.லால் காந்த ஆகியோர் அடங்குகின்றனர்.

# பதுளை-கண்டி மாற்றுப்பாதை அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பதுளை கண்டி மாற்றுப்பாதை அமைப்புப் பணிகள் 2005ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கப் படவுள்ளன. இதற்கான அனுமதியை சிறிலங்கா அமைச்சரவை வழங்கியுள்ளது.

இது தற்சமயம் உள்ள கண்டி, பதுளை வீதியைக் காட்டிலும் 30கிலோ மீற்றர் தூரம் குறைந்த வீதியாகும். இதேவேளை பொல நறுவை மன்னம்பிட்டி பாலம், களுத்துறை ஹிரணபாலம் போன்றவையும் திருத்தப்பட 500மில்லியன் ரூபாய்களுக்கு அமைச்சரவை தமது ஒப்புதலை வழங்கியுள்ளது.

அதனைத்தவிர தற்சமயம் நாட்டில் சுமார் 14 ஆயிரமாக உள்ள சுற்றுலா அறைகளின் எண்ணிக்கையை 25ஆயிரமாக உயர்த்த வேண்டுமென அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க முன்வைத்த யோ[illegible]னைக்கும் அமைச்சரவை அங்க்காரம் வழங்கியுள்ளது.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை விரைவில் அமைக்க ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கோரியுள்ளார். இதுதொடர்பாக அவர் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார்.

ஏற்கனவே இந்த ஆணைக்குழுவை அமைக்கும் வகையில் இதற்கான 4உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு அவை சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் சனாதிபதி அதற்கு இதுவரை பதில் அளிக்காமையால் அந்த ஆணைக்குழுவை அமைக்க முடியாதுள்ளது. இது அரசியலமைப்புக்குப் பாரிய நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளது.

எனவே உடனடியாக இந்த சபை அமைக்கப்பட வேண்டுமெனவும், அல்லது அது அமைக்கப்படாமைக்கான காரணம் குறித்து விளக்கமளிக்க வேண்டும் எனவும் ஜயலத் ஜயவர்த்தன பிரதமரிடம் கோரியுள்ளார்.

# போலி நாணயத்தாள்களுடன் புத்தளத்தில் இருவர் கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை மாற்ற முயன்ற இருவரை கல்பிட்டி பொலிசார் கைது செய்தனர். இந்த சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் வியாபாரத் தளம் ஒன்றில் சுவையுணவை கொள்வனவு செய்த வேளையில் சந்தேகம் கொண்ட வியாபாரத் தள உரிமையாளர் தகவல் கொடுத்ததன் அடிப்படையில் கல்பிட்டி பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இந்த வேளையில் குறிப்பிட்ட இருவரிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா போலித்தாள்கள் கை[illegible]ப்பற்றப்பட்டன. (32)

# தமிழ்ப் பொலிசாரை நியமிக்க பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை

பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் போதுமான அளவு தமிழ்ப் பொலிசார் நியமிக்கப் படாமை குறித்துப் பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள். இதன் காரணமாக தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பொகவந்தலாவவில் சுமார் 60 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றனர். இதில் 95வீதமானோர் தமிழர்களாவர். இந்த நிலையில் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் 23 பொலிசாரில் மூன்றுபேர் மாத்திரமே தமிழர்களாவர். (32)

# எனது கணவரை விடுவிக்க அரசு முயற்சி எடுக்கவில்லை

## –ஈராக்கில் கட த்தப்பட்டவரின் மனைவி கவலை

(கொழும்பு)

ஈராக்கில் தீவிரவாதிகளால் இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா கடத்தப்பட்டு ஒரு மாதம் நிறைவுபெற்றுள்ள நிலையில் அவரின் விடுதலை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பாக அவரின் மனைவி தெரிவிக்கையில், தாம் தமிழர் என்ற ரீதியில் அரசாங்கம் தம்மைப் புறக்கணிப்பதாகத் தெரிவித்தார்.

செய்திகளில் வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தமது கணவர் விடுவிக்கப்படுவார் என எதிர்பார்த்திருந்த போதும் தற்சமயம் அந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் போயுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தினேஸ் தர்மேந்திராவின் விடுதலை தொடர்பாகத் தாம் தொடர்ந்தும் முயற்சி மேற்கொண்டு வருவதாக சிறிலங்கா வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரியான சித்திராங்கனி வாகிஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில்,நாங்கள் தினேஸ் தர்மேந்திராவை விடுவிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம்.

இது தொடர்பாக [illegible] மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தூதுவர்களுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்புகள் கோரப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றார்.

# பாரிய குற்றங்கள் புரிந்தோருக்கு பொலிஸ் தடுப்புக்காவல் நீடிப்பு

## சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

கொலைக்குற்றம், போதைவஸ்து கடத்தல், பெண்கள் பாலியல் வல்லுறவு, மேலும் பயங்கரக் குற்றங்கள் புரிந்தவர்களை 24 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைத்திருப்பதை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஹொரனையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

விசேசமாகப் போதைவஸ்து கடத்துதல், கொலைக்குற்றங்கள் புரிந்தவர்களை விசாரிப்பதற்காகப் பொலிசாருக்கு 24மணித்தியாலங்கள் காணாதபடியால் இதை நீடிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கோதுமை பெற முயற்சி

(கொழும்பு)

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கோதுமை மாவின் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கு அமெரிக்காவிலிருந்து கோதுமை மா இறக்குமதி செய்வது சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு சகல நடவடிக் கைகளும் மேற்கொள்ளுமாறு சிறிலங்கா வாணிபத்துறை அமைச்சர், அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

# வீடமைப்புக்கடன்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிபெறும் சகல ஊழியர்களுக்கும் எதிர்வரும் 2005ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 4வீத குறைந்த வட்டியில் வீடமைப்புக் கடன் வழங்கவுள்ளதாக தொழில் அமைச்சர் அத்தாவுதா செனவிரத்ன தெரிவித்துள்ளார். இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. அரச வங்கி ஊடாக இப்பணம் வழங்கப்படும்.


நுண்கலைக் கல்லூரி-தமிழீழம்

முல்லைமாவட்ட நுண்கலைக் கல்லூரிகள் நடாத்தும்

# மாபெரும் ஓவியப்போட்டி-2004

(முல்லை மாவட்டம்)

தமிழீழ நுண்கலைக்கல்லூரியின் ஆறாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழர் தாயகமெங்கும் ஓவியப்போட்டி நடாத்தப் படவுள்ளது.

இப்போட்டியானது மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.

- கீழ்ப்பிரிவு - 12வயதிற்கு உட்பட்டவர்கள்
- மத்தியபிரிவு - 13-16வயது
- திறந்தபோட்டி - 17வயதிற்கு மேற்பட்டோர்.

## போட்டி விதிமுறைகள்

* இப்போட்டியானது தமிழர் தாயகமெங்கும் மாவட்ட ரீதியாகத் தெரிவுசெய்யப்படும் போட்டி நிலையங்களில் நடைபெறும். (போட்டி நடைபெறும் திகதியும் நிலையங்களும் பின்னர் அறிவிக்கப்படும்)

* ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே தலா ரூ5000/=, ரூ3000/=, ரூ1500/=, பணப்பரிசும், பெறுமதிமிக்க சான்றிதழ்களும் வழங்கப்படும்.

* படைப்புக்கள் யாவும் தமிழர் தாயகத்தின் சமகால விழுமியங்களை முன்னெடுப்பதாக அமைதல் வேண்டும்.

* வர்ண ஓவியங்களாயின் நீர்வர்ணம், போஸ்ரர்வர்ணம், எண்ணெய்வர்ணம் (சோக் உட்பட) ஆகிய வர்ண ஊடகங்களைப் பயன்படுத்தலாம்.

* ஒட்டுவேலைச் சித்திரமும் (கொலாஜ்) ஏற்றுக்கொள்ளப்படும்.

* தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் யாவும் காட்சிக்காக வைக்கப்படும்.

* A3 அளவுகொண்ட ஓவிய வரைதாள்கள் வழங்கப்படும். ஏனைய ஊடகங்களைப் போட்டியாளர்களே கொண்டுவருதல் வேண்டும்.

* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

*** இப்போட்டியில் பங்குபற்றுவோர் தமது முழுப்பெயர், முகவரி, மாவட்டம், பிறந்ததிகதி, பால் (மாணவர்களாயின் பாடசாலையின் பெயர்) ஆகியன அடங்கிய சுய விண்ணப்பத்தினை தனித்தாள் ஒன்றில் தெளிவாகக் குறிப்பிட்டு கீழ் உள்ள முகவரிக்கு 25.12.2004ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.**

*தொடர்புமுகவரி:-*
*பணிப்பாளர்,*
*மு/நுண்கலைக்கல்லூரி,*
*முள்ளியவளை.*

அல்லது

*பணிப்பாளர்,*
*மு/நுண்கலைக்கல்லூரி,*
*புதுக்குடியிருப்பு.*

(5303)



தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு தமிழர் ஆசிரியர் சங்கத்தினரால் வழங்கப்பெற்ற கேடயம் ஒன்றினை நேற்றுமுன்தினம் சங்கத்தலைவர் சி.தண்டாயுதபாணி தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனிடம் தமிழீழ கல்விக் கழக நடுவப்பணியகத்தில் வைத்து கையளிப்பதனை படத்தில் காணலாம். (படம் - சோதி)

# தேசியத் தலைவரின் பிறந்தநாள் சிறப்பிப்பு

தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மன்னாரில் பல்வேறு பகுதிகளிலும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பேசாலையில் கடற்புலிகள் தமிழீழ வடிவிலான கேக் செய்து வெட்டி கொண்டாடினர் அத்துடன் ஒரு மணித்தியாலம் வாணவேடிக்கைகள் நடந்தன. இதேவேளை மன்னார் வைத்தியசாலை ஊழியர்கள் கேக் வெட்டி கொண்டாடினர். அத்துடன் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இதில் போராளிகளும் மக்களும் கலந்து கொண்டனர். பேருந்து நிலையத்தில் தேசியக்கொடியினை ஏற்றிய பின்னர் 20 நிமிடங்கள் வெடிகள் கொழுத்தி, இனிப்புக்கள், கேக் வழங்கி மக்கள் மகிழ்வைக் கொண்டாடினர்.

பொதுவாக மன்னார் பொது அமைப்புகள் அனைத்தும் சிறப்பாக தலைவரின் பிறந்ததின நிகழ்வைக்கொண்டாடின. அத்துடன் தேசியத்தலைவரின் படங்களும் மக்களுக்கு கொடுக்கப்பட்டன.

இதேவேளை வட்டக்கச்சிப் பிரதேசத்தில் தேசியத்தலைவரின் 50ஆவது பிறந்ததின நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகள் வட்டக்கச்சி சந்தையடிப்பகுதியில்



காலை 9.30 மணியளவில் இடம்பெற்றன. பெரியளவில் அமைக்கப்பட்ட கொட்டகையில் 50 பானைகள் வைத்து பொங்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழவை வட்டக்கச்சி தேசிய எழுச்சிப் பேரவையும், வட்டக்கச்சி வர்த்தகப் பெருமக்கள், கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், கிளி/கிழக்கு புனர்வாழ்வுக்கழகம் என்பன இணைந்து நடாத்தின. இதேபோன்று மாயவனூர் முன்பள்ளியிலும் நடைபெற்றது. (மி,12)

# கெற்பெலி, கேடில்ஸ்நகர், தரவை பகுதிகள் வெள்ளத்தால் சூழப்படுவதைத் தடுக்கக் கோரல்

(தென்மராட்சி)

**தொடர்ந்து பெய்துவரும் மழையால் கெற்பெலி, கேடில்ஸ்நகர்,தரவை முதலான பகுதிகள் வெள்ளத்தால் முற்று முழுதாய்த் துண்டாடப்பட்டு வருகிறது.இதனைத் தடுக்க கெற்பெலிசூழல்பாதுகாப்புக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

கெற்பெலி, கச்சாய் செல்லும் பிரதானசாலையில் கடும் மழைவேளைகளில் இடுப்பளவு நீர் பாய்கிறது. இதனால் இப்பிரதான பாதையூடாக இம்மூன்று பகுதிகளுக்கும் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து கவலை தெரிவித்துள்ள கெற்பெலி சூழல் பாதுகாப்புக்குழு கெற்பெலி மத்தியில் உள்ள நளலாய்க்குள வாய்க்கால்கள் கடந்த பல வருடங்களாகத் தூர்ந்துபோய் புனரமைக்க படாமையாலும், தொடர்ந்தும் இப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வாலும், வெள்ள நீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்பதாகத் தெரிவித்துள்ளது.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்களும் வேலைக்குச் செல்வோர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (28)

# தமிழர் புனர்வாழ்வுக்கழக உப பணிமனை திறப்பு

(நல்லூர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உப பணிமனையொன்று அரியாலை மத்தி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் க.ஜெயராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிகொட் உதவித்திட்டப் பணிப்பாளர் என்.நவரத்தினராசா அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து பெயர்ப்பலகையை அரியாலை அபிவிருத்தி சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் திரை நீக்கம் செய்துவைத்தார்.

அரியாலை மத்தி, தெற்கு கிராம அலுவலர்பிரிவில் நிகொட் அமைப்பின் கிராம புனரமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு வசதியாக இவ் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (41)

# நள்ளிரவு உறக்கத்தில் இருந்த போது சுவர் இடிந்து வீழ்ந்தது

## -இணுவிலில் இரு பெண்கள் காயம்

(நல்லூர்)

நள்ளிரவு நேரம் உறக்கத்தில் இருந்தவர்களின் மீது சுவர் இடிந்து வீழ்ந்தமையினால் இரு இளம் பெண்கள் கால்களில் பலத்த காயங்களுக்கு உள்ளாகினார்கள்.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு இணுவில் பாலாவோடை என்னும் இடத்தில் சுவர் வீழ்ந்து 21,24 வயதுடைய இரு பெண்கள் கால்களில் ஏற்பட்ட பலத்த காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக இப்பகுதியில் வெள்ளம் தேங்கியதினால் கிறேசர் கல்லினால் கட்டப்பட்ட வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்தே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும்,

சுவரில்மேல்பகுதியில் ஒரு பகுதி வெளிப்பக்கமாக வீழ்ந்தமையால் தெய்வாதீனமாகஅவர்கள் உயிர்தப்பியதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள். (41)

# தூய தமிழ் பெயர் புத்தகம் வைத்தியசாலையில் கையளிப்பு

(மன்னார்)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் மன்னார் பொது வைத்திய சாலையில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் தலைமையிலான குழுவினால் பிறக்கும் பிள்ளைகளுக்கு தூய தமிழில் பெயரினைச் சூட்டும் நோக்கில் 46 ஆயிரம் தூய தமிழ் பெயர்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

அத்துடன் வைத்தியசாலை நோயாளர்களுக்கு கேக், இனிப்பு பண்டங்களும் வழங்கப்பட்டன.(மி)

# தென்மராட்சியில் வெள்ள அழிவுகள் தொடர்பாக விபரம் சேகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஏற்பட்டுள்ள அழிவுகள் குறித்து தென்மராட்சி பிரதேச செயலகம் விபரங்களை சேகரித்து வருகிறது. இதுவரை ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தினால் இப்பிரதேசத்தில் 15வீடுகள் முழுமையாக அழிந்துள்ளதுடன் 248 வீடுகளில் நீர் புகுந்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதாகவும், 1170 வீடுகள் கடும் சேதத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும், 107 வீடுகள் சிறிய சேதத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும், இதுவரை கிடைத்த விபரங்களின் படி தெரியவருகிறது.

மழை தொடரும் பட்சத்தில் இவ் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிக்கும் எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் அச்சம் தெரிவிக்கின்றன.(28)

# பொது மக்களின் வீடுகளில் தேடுதல் படையினர் புரிந்துணர்வை மீறும் செயல்!

## -பாராளுமன்ற உறுப்பினர் அரியம் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சிறிலங்காப் படையினர் மற்றும் பொலிசார் பொதுமக்களின் வீடுகளில் தேடுதல் நடத்தியிருப்பது குறித்து மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் அமுலிலுள்ள இக்காலகட்டத்தில் படையினர் இவ்வாறு நடந்து கொள்வது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனத் தெரிவித்திருக்கும் அரியம் எம்.பி.இவ்வாறு படைத்தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மக்கள் பீதியும் அச்சமும் அடைந்துள்ளனர். இது இயல்பு நிலையை பாதிக்கச் செய்யும்.

எனவே படைத்தரப்பு இவ்வாறு நடந்து கொள்ளாது தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை உயர் பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

# அடிப்படை வசதிகளை வேண்டிநிற்கும் வவுனியா கல்மடு மகாவித்தியாலயம்!

(செட்டிகுளம்)

வவுனியா கல்மடு மகாவித்தியாலயம் பல்வேறு அடிப்படை வசதிகள் இன்றிபெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவதாக அதன் அதிபர் கணபதிப்பிள்ளை செல்வதேவன் தெரிவித்ததாக.

கடந்த முறை கல்வி பொதுதராதர பரீட்சையில் இந்தப்பாடசாலையே வவுனியா மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்ரைப் பெற்றதாகவும், ஆனால் இந்த பாடசாலை பத்து வகுப்புக்கள் சாதாரண கொட்டகைகளில் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

400 மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும், 23 ஆசிரியர்கள் தேவையான போதும் 16 ஆசிரியர்களே பணியில் இருப்பதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

மறவன்குளம், ஈச்சங்குளம், தவசியாக்குளம், கிடாச்சூரி கல்மடு, பூம்புகார், போன்ற பிரதேசத்தினை சேர்ந்த கஸ்ரப்பட்ட மாணவர்களே கல்வி கற்று வருகின்றார்கள்.

எல்லைப்புறமாக அமைந்துள்ள பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக பல முறை வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்புகொண்ட போதும் எந்தவிதமான வசதிகளும் கிடைக்கவில்லை என்றும் அதிபர் மேலும் தெரிவித்தார். (21)

# மழை வெள்ளம் காரணமாக 305 குடும்பங்கள் பாதிப்பு

(முல்லை)

மழைவெள்ளம் காரணமாக சிலாவத்தை தீர்த்தக்கரை கிராமத்தில் சுமார் 305 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக குடிசைகளே கட்டி வாழும் இம்மக்கள் மழை வெள்ளம் உட்புகுந்ததினால் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இவர்கள் இடம் பெயரும் நிலை தோன்றியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் அயல்கிராமமான தியோகு நகர் கிராமத்தில் 84 குடும்பங்களும் மழையினால் பாதிக்கப்பட்டு வேறுஇடங்களுக்குச் செல்ல முடியாது ஈரத்தினுள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இதனால் தொற்று நோய் பரவக்கூடிய அபாயநிலை தோன்றியுள்ளது.(20)

# மாதர் கி.அ.சங்கத்தின் கண்சிகிச்சை முகாம்

(நல்லூர்)


யாழ்ப்பாணம் பெரியகடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இலவச கண்சிகிச்சை முகாமில் 80இற்கும் மேற்பட்ட மக்களுக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

பெரியகடை மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவி ந.இந்திராணி தலைமையில் கடந்த வியாழன் தனியார் கல்வி நிறுவனமான சயன்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பொதுச்சுடரை யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூமகள் , லயன்ஸ் கழகத்தலைவர், வைத்திய கலாநிதி ராயு ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இங்கு நினைவுரையை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி நிகழ்த்தினர். (41)

# தாயகத்தில் மாவீரர் நாள்–2004


முல்லைத்தீவில்...






முள்ளியவளையில்...



கோப்பாயில்...




வேலணை-சாட்டியில்...


முழங்காவிலில்...






வவுனியா ஈச்சங்குளத்தில்...




மட்டக்களப்பில்....





## சிந்தனைக்கு

வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால்தான், நாம் வன் முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அரசியல் பணியுடன் இணைந்ததே!

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழீழத் தேசியக்கொடியான புலிக்கொடி ஏற்றுவது அடிக்கடி சர்ச்சைக்குரிய விடயமாக்கப்பட்டு வருகின்றது. இதனை மையமாகக் கொண்டு சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு குழப்பங்களையும், வன்முறைகளையும், தூண்டும் செயற்பாட்டிலும் இறங்குவதுண்டு.

இம்முறை மாவீரர்நாள் நிகழ்வுகளின்போதும் இத்தகைய செயற்பாட்டில் சிறிலங்காப் படைத்தரப்பு இறங்கியதினால் வவுனியா வேப்பங்குளத்திலும், மன்னார் நகர்ப்பகுதியில் பதற்றநிலை ஒன்று உருவாவதற்கும், பொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கும் தாக்குதலுக்கும் உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கும்–சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியற் பணிகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு புலிக் கொடியை ஏற்றுவது தொடர்பாக எந்தவிதமான அறிவுறுத்தல்களையோ அன்றி வழிகாட்டுதல்களையோ கொண்டதாக இல்லை.

இதேவேளை விடுதலைப்புலிகள் தமது அரசியற் பணிகளின் செயற்பாடுகளில் ஓர் அங்கமாகத் தேசியக்கொடி ஏற்றுதலை மேற்கொள்வது வழமையாகும். இது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகு[illegible]ள் தனித்துவமாக வேண்டும் என்று மேற்கொள்ளப்படும் [illegible]ல்ல அது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் அனைத்து நிகழ்வின்போது இக்கொடியேற்றப்படுதல் வழமையானதே.

அது மட்டுமல்ல, இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச கட்டடங்களிலோ, அரச நிகழ்வுகளிலோ இக்கொடி ஏற்றப்படுவதும் இல்லை. ஏற்றுமாறு வற்புறுத்தப்படுவதும் இல்லை. விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில் தனியார் கட்டடங்கள்/ நிலையங்கள் என்பனவற்றிலேயே கொடி ஏற்றப்படுகின்றன.

இந்நிலையில், விடுதலைப்புலிகள் தேசியக்கொடியை ஏற்றுவதைத் தடைசெய்ய முற்படுவது, அதனைப் போர்நிறுத்த மீறல் என வெளிப்படுத்த முற்படுவது குழப்பத்தைத் தோற்றிவிப்பதற்கான [illegible]யற்சியே ஆகும். அதாவது விடுதலைப்புலிகளின் வழமையான அரசியற்பணி நடவடிக்கை ஒன்றை யுத்தநிறுத்த உடன் பாட்டிற்கு மாறான எவ்வாறு அர்த்தப்படுத்த முனையும்.

உண்மையில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பானது யுத்த நிறுத்தச் சூழ்நிலையைக் குலைக்க வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளின் அரசியற் பணி நடவடிக்கைகளை இல்லாது ஒழித்தல் வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே கொடி தொடர்பான விடயத்தை விவகாரமாக்க விரும்புகின்றது. இதன் காரணமாகவே மக்கள் மீது வன்முறையையும் கட்டவிழ்த்து விட முனைந்துள்ளது.

இதேவேளை இத் தேசியக்கொடி ஏற்றல் விவகாரத்தைப் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினால் ஒரு யுத்தநிறுத்த சம்பவமாகவே பதியப்பட்டு வருகின்றது. ஆனால் இது ஏற்றுக் கொள்ளத்தக்க தொன்றன்று ஏனெனில் உடன்பாட்டிற்கு உட்படாததொரு விடயத்தை எவ்வாறு யுத்தநிறுத்த மீறல் எனப் பதிவு செய்தல் முடியும்?

அது மட்டுமல்ல யுத்தநிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்வேறு விதிகளை இன்னமும் சிறிலங்கா அரசாங்கமும் அதன் ஆயுதப்படைத்தரப்பும் நிறைவேற்றியதாக இல்லை. குறிப்பாக மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கென உள்நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல அம்சங்கள் இன்னமும் நிறைவுசெய்யப்படவில்லை. குறிப்பாக மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. பல பாடசாலைகள், கோவில்கள் இன்னமும் பயன்பாட்டிற்கு வரவில்லை. ஆனால் இவற்றை கண்காணிப்புக்குழு யுத்தநிறுத்த மீறல் எனப் பதிவுசெய்ததாகவும் இல்லை.

அதாவது உடன்பாட்டிற்கு மாறான ஆயுதப்படைகளின் இத்தகைய செயற்பாடுகளை யுத்தநிறுத்த மீறல் எனப் பதிவு செய்யாத கண்காணிப்புக்குழு, உடன்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்பணி நடவடிக்கையின்போது தேசியக்கொடி ஏற்றுதலை யுத்தநிறுத்த மீறல் எனப் பதிவு செய்வது அர்த்தமுள்ளதொன்றாக எவ்வாறு இருக்க முடியும்?

ஆனால் யுத்தநிறுத்த விதிகளுக்குள் அடங்காத இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேசியக்கொடியேற்றல் விவகாரத்தை மையமாகக் கொண்டு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்புக் குழப்பம் ஒன்றை ஏற்படுத்த முற்பட்டு நிற்கின்றமையானது. மாவீரர்நாள் நிகழ்வுகளை மட்டும் குழப்பத்திற்குள்ளாக்கும் செயலாகக் கொள்ளத்தக்கதல்ல. யுத்தநிறுத்த உடன்பாட்டையே குழப்பத் திற்குள்ளாக்கும் முயற்சியாகும்.

# சிறிலங்கா பாராளுமன்ற வளாகத்தில் ஈகச்சுடரேற்ற மாவீரருக்கு அஞ்சலி

(கொழும்பு)

தமிழீழ தேசிய மாவீரர் நாளான நேற்றுப் பாராளுமன்ற வளாகத்தினுள் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 21பேரும் ஈகச் சுடரேற்றி மாவீரர் நாளை அனுஷ்டித்துள்ளனர்.

இது பற்றிப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவிக்கையில்;

தமிழரசுக்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரும் பாராளுமன்ற முன்புற வாசலிலே சுடரேற்றி அஞ்சலி செலுத்தி அகவணக்கம் செலுத்தியதாகவும் அதனைத் தொடர்ந்து இரா.சம்பந்தன் அவர்கள் சிறப்புரையினையும் ஆற்றியதையடுத்து, மாவீரர் நிகழ்வு நிறைவு பெற்றதாகவும் தெரிவித்த அவர்,

இலங்கை அரசியல் வரலாற்றிலே அதுவும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களுக்காக இலங்கை பாராளுமன்றத்தில் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. இதுவே வரலாற்று முதற் சந்தர்ப்பம் என்றும் கஜேந்திரன் தெரிவித்தார்.

மேலும் அண்மையில் மாவீரர் தினத்தையொட்டி வவுனியா மன்னார்ப் பிரதேசங்களில் பொலிசாரும், இராணுவத்தினரும் மேற்கொண்ட சதி முயற்சிகள் பற்றியும் கண்மூடித்தனமான தாக்குதல் இடம்பெற்றதை முன்னிட்டு சர்ச்சையைக் கிளப்பி-யிருந்ததாகவும் அது தொடர்பாக நேற்று அவர்கள் பதிலளித்துள்ளனர். இவற்றில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தன்னுடைய கருத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்கு மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு இது தொடர்பாகப் பக்கச் சார்பற்ற விசாரணையொன்றுக்காக உடனடியாக உத்தர விடுவதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறமால் பார்த்துக்கொள்ள முடியும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்திலே பாராளுமன்ற உறுப்பினர் வினோ அவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை மிகவும் வன்மையாகக் கண்டித்ததோடு இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவதைத் தடுப்பதற்குத் தாங்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், எதிர் காலத்திலே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுகின்ற விடயத்தில் இராணுவத்தினர் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க முடியுமென்றும் கூறியுள்ளார்.

பிரதம மந்திரி, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே ஆகிய மூவரும் இந்த விடயத்தில் உறுதியளித்திருப்பதாகவும் கஜேந்திரன் மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் பேரினவாதிகள் நேற்றும் மாவீரர் நாளைக் குழப்ப முயற்சி!

தமிழீழ தேசியத்தின் மாவீரர் தின வைபவத்தை சிங்கள பௌத்த பேரினவாதிகள் நேற்று குழப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட போதிலும் அது தோல்வியில் முடிவுற்றது.

ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தலைமையிலான வடக்கு கிழக்கு சிங்கள மக்கள் முன்னணி இந்த முயற்சியை மேற்கொண்டது. உண்மையான மாவீரர்கள் என 4ஆம் கட்டைச் சந்தியிலிருந்து சிறிமாபுரம் வரை இந்த அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் பொலிசாரினால் கண்ணீர்ப் புகையடித்து கலைக்கப்பட்டது. குறிப்பிட்ட ஊர்வலம் புறப்பட்ட போது பௌத்த பிக்குமார் உட்பட சுமார் ஆயிரம் பேர் யுத்தத்தில் கொல்லப்பட்ட சிறிலங்கா படைவீரர்களின் படங்களையும் ஏந்தியவாறு காணப்பட்டனர். தமிழ் கிராமங்கள் ஊடாக இந்த ஊர்வலம் செல்ல பொலிசார் அனுமதிக் காததையடுத்து பொலிசாருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்குமிடையில் முறுகல் நிலை ஏறப்பட்டது. இந்த நிலையில் பொலிசாருக்கு ஆத்திர மூட்டும் வகையில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் நடந்து கொண்டதையடுத்து கண்ணீர்ப் புகை அடித்து ஊர்வலம் கலைக்கப்பட்டது.

## நீதிபதி கொலை தொடர்பாக ஏழு பேர் விளக்கமறியலில்!

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகத்திற்குரிய ஏழு பேரும் நாளை வரை (திங்கள்) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் சந்தேகத்திற்குரியவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை எந்தவொரு சந்தேகமும் இன்றி நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான அனைத்து விடயங்களும் பொலிசாரிடம் இருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும், இதில் ஒருவர் தொடர்புபட்டுள்ளாரா அல்லது மேலும் பலர் தொடர்புபட்டுள்ளாரா? என்பது குறித்து ஆராய்வதற்கு எமக்கு இன்னும் சில தினங்கள் தேவையெனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆழ ஊடுருவும் படையணியின் 41 கோடி சீருடையைக் காணவில்லை!

–இராணுவ வட்டாரங்கள் அதிர்ச்சி!

புலிகளின் பகுதிகளி[illegible]ள் ஊடுருவி முக்கிய புலி உ[illegible]பினர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கென அமைக்கப்பட்ட இராணுவத்தின் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணிக்கென விசேடமாகக் கொள்வனவு செய்யப்பட்ட சீருடைகளில் ஒரு தொகுதி காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரம் இராணுவ உயர் மட்டங்களில் பேரிடியாக விழுந்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவினால் இராணுவத்தில் உருவாக்கப்பட்ட இந்த விசேட படையணிக்கென அமெரிக்காவிலிருந்து மிக இரகசியமான இந்தச் விசேட சீருடைகள் கொள்முதல் செய்யப்பட்டன. இந்தச சீருடைகள் தொடர்பாக கடந்த 2001ஆம் ஆண்டு அதிரடிப் படையில் கட்டளை உத்தியோகத்தராக முன்னர் பதவி வகித்தவர் அனுப்பிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆரம்பகட்ட விசாரணைகளில் குறிப்பிட்ட நிலையத்தின் கட்டளை அதிகாரியை விசாரித்தபோது அவர் சீருடைகள் அதிரடிப் படையின் ஆர்.எவ்.ரி. முகாமுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார். அதன் பிரகாரம் மூன்று வருடங்களாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் அந்தச் சீருடைகள் காணாமற்போயுள்ளன என்று தற்போது தெரியவந்துள்ளது. இந்தச் சீருடைகள் புலிகளின் கைகளுக்குச் சென்றுவிட்டனவா? என்பது குறித்து இராணுவ வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து தற்போது விசாரணைகள் முழு அளவில் முடுக்கி விடப்பட்டுள்ளன. இராணுவ நீதிமன்றத்தின் விசா ரணைகள் ஒருபுறமும் இராணுவத் தளபதியின் உத்தரவின்பேரில் இராணுவப் பொலிஸின் விசாரணைகள் மறுபுறமும் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சீருடைகளின் பெறுமதி சுமார் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் என்று இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக இது வரை ஆறு பேரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# முல்லையில் தமிழீழக் கடற்படையினரால் மாவீரர் நாள் சிறப்புற அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தாயக மீட்புப் போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் நினைவு நாளான மாவீரர் நாளின் இறுதிநாள் நிகழ்வுகள் தமிழீழக் கடற்படையின் ஏற்பாட்டில் முல்லைக் கடற்பரப்பிலும், நகரிலும் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

நேற்று மாலை 4.30 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய முன்றலில் இருந்து தமிழீழக் கடற்படையின் கடற் கரும்புலிகள் படையணி,சாள்ஸ்,(நளாயினி) படையணி, விசேடபடையணி ஆகியனவற்றின் விசேட அணிவகுப்பு ஆரம்பமாகி முல்லைக் கடற்கரையை வந்தடைந்தது அதனைத் தொடர்ந்து தமிழீழக் கடற்படையின் ராஜ்மோகன், வான்கவி மயூரன்,இந்துமதி உதயச் செல்வி, பரந்தாமன், இசையரசி ஆகிய விரைவுத் தாக்குதல் படகுகளின் விசேட அணிவகுப்பும் கடல் சாகச நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அடுத்து தமிழீழக்கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை, கடற்படை துணைத் தளபதி செழியன், கடற்படையின் தளபதிகளில் ஒருவரான கபிலன்,சங்கர், மோகன் ஆகியோர் உள்ளிட்ட சிறப்பு அணியினர் முல்லைக் கடலில் மாவீரர் நினைவாக அமைக்கப்பட்டிருந்த பொதுச்சுடரை சென்றடைந்தனர்.தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் சிறப்புரை கடற்கரையில் ஒலிக்க விடப்பட்ட அதேவேளை கடலில் சாகசம் நிகழ்த்திய தமிழீழக் கடற்படையின் கடற்கலன்கள் அனைத்திலும் ஒலிக்கவிடப்பட்டன.

சரியாக 6.07 மணிக்கு கடலில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பொதுச்சுடரை தமிழீழக்கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து கடற்கரையில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களால் சமநேரத்தில் சுடர் ஏற்றப்பட்டது. இதேவேளை கடலில் சாகசத்தில் ஈடுபட்ட தமிழீழக்கடற்படையின் தாக்குதல் கலன்களிலும் வெளிச்சம் ஒளிரவிடப்பட்டது. அடுத்து மாவீரர் களின் நினைவாக ஏற்றப்பட்ட பொதுச்சுடருக்கு தமிழீழக்கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் கடலில் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கடல் அன்னைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். முல்லைத் தீவுக்கடற்பரப்பில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்தன. மேற்படி நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் போராளிகள் எனப் பலரும் முல்லைக் கடற்கரையில் கூடியிருந்தனர்.

(லோ)

## வீரச்சாவு

அம்பாறைமாவட்ட அக்கரைப்பற்றுப் பகுதியில் கடந்த 25.11.2004 அன்று தேச விரோதிகளின் தாக்குதலில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

☐ நாட்டுப்பற்றாளர் காந்தன்
(சாமித்தம்பி உமாகாந்தன்
அக்கரைப்பற்று 8 அம்பாறை) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைச் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# கிளிநொச்சி நகர் மண் மீட்புச் சமரில் வீரச்சாவடைந்தோருக்கு நினைவுக்கல்

## கிளிநொச்சி குளச்சந்தியில் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)



எமது அடுத்த சந்ததியினருக்கு வரலாற்று ஆவணங்களாக எடுத்துக்காட்டும் நினைவுக்கட்டுமாணங்கள் யாவும் எமது தேசவிடுதலையின் ஆவணங்களை ஆதாரத்தோடு வெளிப்படுத்தும்.

இவ்வாறு நேற்றுக்காலை 9.30 மணிக்கு கிளிநொச்சிகுளச் சந்தியில் தமிழீழ அரும்பொருள் காப்பகத்தினால் அமைக்கப்பெற்ற மாவீரர் நினைவுத்தூபி நில மீட்பு கல்வெட்டு திரைநீக்கம் தமிழீழ அரும்பொருள் காப்பகப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன் தலைமைவகித்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ்த் தேசிய புனிதநாளில் எமது தேச விடுதலையின் அத்திவாரங்களான மாவீரரின் தியாகத்தை உணர்ந்திருந்த வேளையிலும் எமது போரியல் வரலாற்று வடுக்களையும், எச்சங்களையும் தாங்கியிருக்கும் நினைவுகளை நிறுவுவதன் மூலம் எமது அடுத்த சந்ததியினருக்கு வரலாற்று ஆவணங்களாக எடுத்துக்காட்டும் நினைவுக்கட்டுமாணங்கள் எமது தேச விடுதலையின் ஆவணங்களை ஆதாரங்களோடு வெளிப்படுத்தும் இந்தத் தார்மீகப் பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு என்பதை உ[illegible]ந்து பணி செய்வோம் என்றார்.

கிளிநொச்சிக்குளச் சந்தியில் ஓயாத அலைகள்-2 நடவடிக்கை மூலம் கிளிநகர் மீட்புச்சமரில் வீரச்சாவடைந்த 398 மாவீரர்களையும் நினைவு கூரும்வகையில் நிறுவப்பட்ட மேற்படி தூபியும், கல்வெட்டும் நேற்றுக்காலை 9.30 மணிக்குத் திரைநீக்கம் செய்து வைக்கப்பெற்றது.

தமிழீழ அரும்பொருள் காப்புப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நினைவுத்தூபியினை கிளி.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் காண்டீபன் அவர்களும், நில மீட்பு நினைவுக் கல்வெட்டினை கிளி.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அ.தனபாலசிங்கம் கிளி.மாவட்ட அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோரும் திரைநீக்கம் செய்துவைத்தனர். மாவீரர்களின் திருவுருவப்படத்திற்குக் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையர் பொன்.நித்தியானந்தம் மலர்மாலை அணிவித்தார்.(சோ)

# சமாதான முன்னெடுப்பில் முன்னேற்றமில்லையெனில் போர் நிறுத்த உடன்பாடு அர்த்தமற்றதாகிவிடும்

## கஜேந்திரகுமார் எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்புக்களில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லா விட்டால் போர்நிறுத்த உடன்படிக்கை பொருத்தமற்றதாகிவிடும் என தமிழீழத் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எச்சரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரின் முதலாவது வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் சமாதானத்திற்கான பேரவாவிற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. எமது போர் நிறுத்த உத்தரவாதத்திற்கு இவ்வரசினால் தவறான அர்த்தம் கொடுக்கப்படுவது இவ்வரசின் பலவீனத்தின் வெளிப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வரவு செலவுத்திட்டம் சிங்கள மக்களிற்குப் பயன்களை வெளிப்படுத்துவதாகவும், தமிழ் மக்களிற்குப் பயன்கள் அற்றதாகவும் உள்ளது எனவும் தமிழ் மக்களின் அரசுரிமை அதிகாரம் சிறிலங்காவில் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

# அம்பாறை மாவட்ட மாவீரர் நினைவாலயம் தம்பிலுவில் திறந்து வைப்பு

அம்பாறை மாவட்ட மாவீரர்களின் நினைவாலயம் நேற்று முன்தினம் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனன் ஏற்றி வைத்தார். மாவீரர் நினைவாலயத்தினை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் திறந்து வைத்தார். பொதுச் சுடரினை அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தாரகாவும், ஈகைச் சுடரினை தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதனும் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மலர்மாலை அணிவிக்கப்பட்டது. இந்நினைவாலயத்தில் சுமார் 3000 மாவீரர்களின் திருவுருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் சங்கரி, மாவீரர் காப்பகப்பொறுப்பாளர் பத்மன், அம்பாறை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் இலக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். அ. சந்திரநேரு, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள், போராளிகள், பொது மக்கள் என சுமார் 3500இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தலைவருக்கு ஆசிவேண்டி அமெ. நகரங்களில் பிரார்த்தனை

(நியூயோர்க்)

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 50 ஆவது அகவையை முன்னிட்டு அமெரிக்காவில் விசேட பிரார்த்தனைகள் இடம் பெற்றுள்ளன.

அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பிரார்த்தனைகள் இந்து, கிறிஸ்தவமத முறைப்படி நியூயோர்க், சிக்காக்கோ,லொஸ்ஏஞ்சல்ஸ், சக்ர மென்ரோ, சான் பிரான்ஸ்சிக்கோ, புளோரிடா மற்றும் ஒஹாயோ ஆகிய மாநிலங்களில் இடம் பெற்றுள்ளன.

## பொது....

இடங்களில் பிரத்தியேகமாக பிரமாண்டமான பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள இன மக்களின் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன், அரச தனியார் போக்குவரத்துக்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டு வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை நோக்கி மக்கள் அலை அலையாகத் திரண்டு மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

மல்லாவியில் யோகபுரம் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலய மண்டபத்தில் மாவீரர்களுக்கு கடற்கரும்புலிகள் அணிவகுத்துச் சென்று வணக்கம் செலுத்தியதுடன் பொதுமக்களும் வணக்கம் செலுத்தினர்.

## தேசியத் தலைவரின்....

மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் மட்டு.அம்பாறை மாவட்ட துணைத்தளபதி ராம், தரவை மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி கேணல் பாணு, வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி இனியவன் ஆகியோர் சுடரேற்றினர்.

### மன்னாரில்...

மன்னார் ஆண்டான்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வட போர் முனைகட்டளைத் தளபதி கேணல்ஜெயம், பெரியபண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லத்தில் நிதிப்பொறுப்பாளர் தமிழ்க்குமரன் ஆகியோர் சுடரேற்றினர்.

### முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடலிலே காவியமான மாவீரர்கள் நினைவாக பிரதான சுடரினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல்.சூசை ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் கடற்புலிகளின் மகளிர் சிறப்பு தளபதி விடுதலை, முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் விடுதலைப்புலிகளின் நில அளவைப் பொறுப்பாளர் சசிக்குமார், ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் கேணல் ரமேஷ், நிஷாம் வெட்டை மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி கேணல் ஆதவன் ஆகியோர் பிரதான ஈகச்சுடர்களை ஏற்றி வைத்தனர்.

### திருகோணமலையில்...

தி[illegible]கோணமலை ஆலங்குளம் துயிலுமில்லத்தில் திருமலைக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், பெரியகுளம் மாவிரர் துயிலுமில்லத்தில் திருமலை வடக்கு இராணுவப் பொறுப்பாளர் குணம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லத்தில் திருமலை மத்தி இராணுவப் பொறுப்பாளர் வரன், உப்பாறு மாவீரர் துயிலுமில்லத்தில் மத்திய இராணுவப் பொறுப்பாளர் நிமல்ராஜ் ஆகியோர் சுடரேற்றினர்.

### யாழ்.இல்...

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் துயிலுமில்லத்தில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, எல்லங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் தீவகக் கோட்ட சிறப்பு பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் பிரதான சுடர்களை ஏற்றினர்.

### வவுனியா...

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி பிரதான சுடரேற்றினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.